RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்-61 | 07 மார்ச் | வெள்ளிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## அமெரிக்காவில் இந்திய மாணவர் சுட்டுக்கொலை: தெலங்கானாவில் உள்ள குடும்பத்தினர் அதிர்ச்சி

புதுடெல்லி, மார்ச்.7

அமெரிக்காவில் இந்திய மாணவர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். சுட்டுக்கொல்லப்பட்ட மாணவர் கம்பா பிரவீன், அமெரிக்காவில் முதுகலை அறிவியல் படித்துக்கொண்டே மில்வாக்கியில் உள்ள ஒரு கடையில் பகுதி நேரமாக பணியாற்றிவந்தார். பிரவீன் தெலங்கானாவின் ரங்கா ரெட்டி மாவட்டத்தின் கேஷம்பேட்டையைச் சேர்ந்தவர். மாணவர் உயிரிழந்தார்.



தெலங்கானா மாணவர்.. மகனின் மரணம் குறித்து மாணவனின் தந்தையான ராகவுலு கூறுகையில், "காலையில் எனது மகனிடம் வந்த அழைப்பை நான் தவறவிட்டிருந்ததை அறிந்து அவனுக்கு ஒரு வாய்ஸ் மெசேஜ் அனுப்பியிருந்தேன். ஒரு மணிநேரம் கடந்தும் பதில் ஏதும் வராததால், மகனின் எண்ணுக்கு அழைத்தேன். ஆனால் போனை வேறு ஒருவர் எடுத்துப் பேசினார். இதனால் சந்தேகமடைந்த நான் தொடர்பைத் துண்டிதேன்.

ஏதாவது விபரீதமாக நடந்துவிட்டதா என சந்தேகப்பட்டு மகனின் நண்பர்களைத் தொடர்பு கொண்டேன். அவர்கள், எனது மகன் பகுதி நேரமாக அங்குள்ள கடை ஒன்றுக்கு வேலைக்குச் சென்றதாகவும், அங்கு நடந்த கொள்ளைச் சம்பவத்தில், கொள்ளையர்கள் துப்பாக்கியால் சுட்டதில், தோட்டா ஒன்று எனது மகனைத் தாக்கி அவன் இறந்து விட்டதாக தகவல் தெரிவித்தனர்." என்றார்.

இதனிடையே சிகாகோவில் உள்ள இந்தியத் தூதரகம் பிரவீனின் குடும்பத்தினருடன் தொடர்பு கொண்டதாக தெரிவித்துள்ளது. அதன் எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "மில்வாக்கியின் விஸ்கான்சின் பல்கலைகழகத்தில் முதுகலை படித்து வந்த மாணவர் பிரவீன் குமார் கம்பா, அகால மரணம் அடைந்த செய்தி கேட்டு வருத்தம் அடைந்தோம். நாங்கள் பிரவீனின் குடும்பம் மற்றும் பல்கலைக்கழகத்துடன் தொடர்பில் இருக்கிறோம். அவர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளும் செய்யப்படும்" என்று தெரிவித்துள்ளது.

இதனிடையே, பிஆர்எஸ் கட்சியின் எம்எல்சி கவிதா பிரவீனின் உடலை சொந்த ஊர் கொண்டுவர மத்திய மாநில அரசுகள் உதவ வேண்டும் என்று தெரிவித்துள்ளார். அவர் கூறுகையில், "இது மிகவும் துரதிருஷ்டமான சம்பவம். நானும் மாணவர் பிரவீன் கொல்லப்பட்ட அந்த செய்தி குறித்து அறிந்தேன். மத்திய, மாநில அரசுகள் அவரது உடலை இந்தியா கொண்டுவருவதற்கான நடைமுறைகளை விரைவாக மேற்கொள்ள வேண்டும் என நான் கோருகிறேன். ஏனெனில் அவரது பெற்றோர் மிகவும் துயரப்படுவர். எனது பிரார்த்தனைகள் அவர்களுடன் உள்ளன." என்று தெரிவித்துள்ளார்.

## ரூபாய் நோட்டில் உள்ள மொழிகள் அனைத்தையும் ஆட்சிமொழியாக அறிவிக்க தயக்கம் ஏன்? மு.க.ஸ்டாலின் கேள்வி

சென்னை, மார்ச்.7



"ரூபாய் நோட்டில் உள்ள இந்தியை அழிப்பீர்களா என்று எங்களைப் பார்த்து கேட்கும் அதிமேதாவிகளான உங்களைப் பார்த்து நாங்கள் கேட்கிறோம், ரூபாய் நோட்டில் அச்சிடப்பட்டுள்ள மொழிகள் அனைத்தையும் இந்தியாவின் ஆட்சிமொழியாக அறிவிக்கத் தயக்கம் ஏன்? தமிழ் மீது பிரதமர் உள்ளிட்ட ஒன்றிய பாஜக ஆட்சியாளர்களுக்கு உண்மையான அக்கறை இருக்குமானால் உயர்தனிச் செம்மொழி என்ற தகுதியுடைய எங்கள் தாய்மொழியை ஆட்சிமொழியாக்கிட எது தடுக்கிறது?" என திமுக தொண்டர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் ஸ்டாலின் கேள்வி எழுப்பியுள்ளார்.

திமுக தலைவரும், தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின், திமுக தொண்டர்களுக்கு எழுதியுள்ள 9வது கடிதத்தின் விவரம்: மொழிவழி மாநிலங்களாக உருவாக்கப்பட்ட இந்திய ஒன்றியத்தில், ஒரு மாநிலத்தில் பேசப்படும் மொழி மீது மற்றொரு மொழியைக் கட்டாயமாகத் திணிக்கும்போது அந்த மாநில மக்கள் பேசுகின்ற மொழியும் அதன் பண்பாடும் சிதைக்கப்படும்.

இந்தியும் சமஸ்கிருதமும் வலிந்து திணிக்கப்படுவதால் இந்திய மொழிகள் பலவும் திட்டமிட்டு சிதைக்கப்படுகின்றன. தமிழ்நாடு தன் உயிரினும் மேலானத் தமிழையும் அதன் பண்பாட்டையும் உயிரைக் கொடுத்து காப்பாற்றியுள்ளது.

இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பு 1961ம் ஆண்டு எடுக்கப்பட்டபோது இந்தியாவிலிருந்த தாய்மொழிகளின் எண்ணிக்கை 1652 எனப் பட்டியலிடப்பட்டது. மாநில மொழிகள் மட்டுமின்றி, பழங்குடிகள், இனக்குழுக்கள் உள்ளிட்டோர் பேசுகின்ற மொழிகளும் இந்தக் கணக்கில் வரும். பத்தாண்டுகள் கழித்த 1971ல் மக்கள் தொகை கணக்கெடுப்பின்போது 109 மொழிகள் மட்டுமே தாய்மொழிகள் பட்டியலில் இடம் பெற்றன. எப்படி இந்த திடீர் மாற்றம்?

மொழி உணர்வுமிக்க வங்கதேச மாணவர்கள் பாகிஸ்தான் போலீஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். தமிழ்நாட்டில் 1965ம் ஆண்டு மொழிப் போர்க்களத்தில் திராவிட இயக்கத்தைச் சேர்ந்த மாணவர்களும் இளைஞர்களும் இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து, தாய்மொழியைக் காப்பதற்கு தங்கள் உடலுக்குத் தாங்களே தீவைத்துக்கொண்டு, 'தமிழ் வாழ்க இந்தி ஒழிக' என்று முழங்கியபடியே உயிரைத் தியாகம் செய்தனர். காவல்துறையின் துப்பாக்கிச் சூட்டுக்கு மட்டுமின்றி, துணை ராணுவத்தின் வேட்டைக்கும் பலியான தீரர்களின் வரலாற்றுப் பக்கங்களைக் கொண்டவர்கள் நாம். உலகத் தாய்மொழி நாள் என்பது பிப்ரவரி 21ம் தேதி கடைப்பிடிக்கப்பட்டாலும் ஒவ்வொரு நாளுமே நமக்குத் தாய்மொழி நாள்தான். ஆதிக்க மொழிகளிடமிருந்து அன்னைத் தமிழைக் காப்பதற்கு எல்லா நாளிலும் விழிப்புடன் இருப்போம்.

"கன்னடத்தைப் புறக்கணித்து, இந்தியைத் திணிப்பவர்களை ஏற்க மாட்டோம்" என்று கூறி கர்நாடகாவில் இந்தி எழுத்துகளை அழிப்பது பற்றிய காணொலி சமூக வலைத்தளங்களில் பரவிக் கொண்டிருக்கிறது.

இயற்கைத்தன்மையும் இயல்பான விருப்பமும் கொண்டவற்றைத்தான் உடலும் உள்ளமும் ஏற்றுக்கொள்ளும். திணிக்கப்படுவது எதுவாக இருந்தாலும் உடனடியாக அது வெளியேற்றப்படுவதுடன், மனிதர்களின் திறனையும் கெடுத்துவிடும். மொழித்திணிப்பு என்பதும் அப்படித்தான். தமிழ்நாடு முன்னெடுத்த மொழிக்கொள்கை அறிவியல் பூர்வமானதும் ஆக்கப்பூர்வமானதுமாகும். சமத்துவம் என்பது மொழிகளுக்கிடையிலும் இருக்க வேண்டும்.

இந்திய அரசியல் சட்டம் 351வது பிரிவை சுட்டிக்காட்டி, இந்தி மொழியை வளர்க்கும் பொறுப்பை ஒன்றிய அரசு தீவிரமாக மேற்கொள்கிறது. ஆண்டுதோறும் செப்டம்பர் 14ம் நாளை 'இந்தி திவாஸ்' என்ற பெயரில் கொண்டாடுகிறது. இந்தியைக் கொண்டாடும் அந்த நாளில், இந்தித் திணிப்பு முழக்கங்களை ஒன்றிய ஆட்சியாளர்கள் முன்வைக்கிறார்கள். இந்திய மொழிகளை அச்சுறுத்தும் திட்டங்களை வெளிப்படுத்துகிறார்கள்.


'இந்தி திவாஸ்' என்று கொண்டாடப்படுவது போல, 8வது அட்டவணையில் இடம் பெற்றுள்ள 22 மொழிகளுக்கான நாட்கள் உண்டா? இந்தியைத் தவிர மற்ற இந்திய மொழிகளை பாரபட்சமாக அணுகுவது ஏன்? ரூபாய் நோட்டில் உள்ள இந்தியை அழிப்பீர்களா என்று எங்களைப் பார்த்து கேட்கும் அதிமேதாவிகளான உங்களைப் பார்த்து நாங்கள் கேட்கிறோம், ரூபாய் நோட்டில் அச்சிடப்பட்டுள்ள மொழிகள் அனைத்தையும் இந்தியாவின் ஆட்சிமொழியாக அறிவிக்கத் தயக்கம் ஏன்? தமிழ் மீது பிரதமர் உள்ளிட்ட ஒன்றிய பாஜக ஆட்சியாளர்களுக்கு உண்மையான அக்கறை இருக்குமானால் உயர்தனிச் செம்மொழி என்ற தகுதியுடைய எங்கள் தாய்மொழியை ஆட்சிமொழியாக்கிட எது தடுக்கிறது?

எங்கள் அண்ணா அன்று நாடாளுமன்ற மாநிலங்களவையில் கேட்டதைத்தான் அவரது தம்பிகளான நாங்களும் கேட்கிறோம். அவரால் பெயர் சூட்டப்பட்ட எங்கள் தமிழ்நாடு கேட்கிறது. லட்சியம் நிறைவேறும்வரை கேட்டுக்கொண்டே இருப்போம். என கூறியுள்ளார்.

## கரூரில் அமைச்சர் செந்தில் பாலாஜியின் நண்பர்கள் வீடுகளில் அமலாக்கத் துறை அதிகாரிகள் சோதனை

கரூர், மார்ச்.7

கரூரில் மின்சாரத்துறை அமைச்சர் செந்தில் பாலாஜியின் ஆதரவாளர்கள் 3 பேர் வீடுகளில் அமலாக்கத் துறை அதிகாரிகள் வியாழக்கிழமை காலை 9 மணி முதல் அதிரடியாக சோதனை நடத்தி வருகின்றனர்.



சட்ட விரோத பணப் பரிவர்த்தனை வழக்கில் மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வை துறை அமைச்சர் செந்தில் பாலாஜி கடந்த 2023 ல் அமலாக்கத்துறை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார். அப்போது அவரது சகோதரர் வீடு மற்றும் ஆதரவாளர் வீடுகளில் அமலாக்கத் துறை மற்றும் வருமான வரித்துறை அதிகாரிகள் சோதனை நடத்தினர். இந்நிலையில் செந்தில் பாலாஜி அண்மையில் ஜாமீனில் உச்ச நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டார். மீண்டும் அமைச்சரானார்.

இதனிடையே அமைச்சர் செந்தில் பாலாஜியின் ஆதரவாளர்களாக கருதப்படும் கரூர் ராயனூரில் வசிக்கும் கொங்கு மெஸ் மணி மற்றும் கரூர் ஆத்தூர் பிரிவு அருகே கோதை நகரில் வசிக்கும் சக்தி மெஸ் சக்திவேல் மற்றும் செந்தில் பாலாஜியின் ஆதரவாளரும் பொதுப்பணித்துறை ஒப்பந்ததாருமான எம்சிஎஸ். சங்கரின் வீடு இருக்கும் கரூர் பழனியப்பா நகரிலும் அமலாக்கத் துறை அதிகாரிகள் வியாழக்கிழமை காலை 5 கார்களில் சுமார் 20 பேர் வந்து சோதனை நடத்தி வருகின்றனர்.

அமலாக்கத்துறை அதிகாரிகளின் திடீர் சோதனை அரசியல் வட்டாரத்தில் மீண்டும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## "பாக்., ஆக்கிரமிப்புகளை மீட்டுவிட்டால் காஷ்மீர் பிரச்சினை முடிந்துவிடும்" வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் பேச்சு

லண்டன், மார்ச்.7



"பாகிஸ்தானிடமிருந்து ஆக்கிரமிப்புகளை மீட்டுவிட்டால் காஷ்மீரின் மொத்தப் பிரச்சினையும் தீர்ந்துவிடும்" என வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் கூறியுள்ளார். பிரிட்டன், அயர்லாந்து நாடுகளுக்கு 6 நாட்கள் அரசுமுறைப் பயணமாகச் சென்றுள்ளார் வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர்.

அமைச்சரை தாக்க முயற்சி: முன்னதாக லண்டனில் பிரிட்டன் வெளியுறவு அமைச்சர் டேவிட் லேமியின் செவனிங் ஹவுஸில் இருதரப்பு ஆலோசனையில் கலந்து கொண்டார். அப்போது வெளியே திரண்டிருந்த காலிஸ்தான் ஆதரவாளர்கள் ஜெய்சங்கருக்கு எதிராக கோஷமிட்டனர். காலிஸ்தான் ஆதரவு பதாகைகளையும் ஏந்தியிருந்தனர். அதில் ஒருவர் அமைச்சர் ஜெய்சங்கர் சென்ற காரின் முன்னால் பாய்ந்ததோடு அவரை தாக்கவும் முயற்சித்தார். அவரை காவலர்கள் லாவகமாகத் தடுத்தனர். இதனால் ஆத்திரமடைந்த அவர் கையில் வைத்திருந்த இந்திய தேசியக் கொடியை கிழித்தெறிந்தார்.

காலிஸ்தான் ஆதரவாளர்களை, அமைச்சர் ஜெய்சங்கரை தாக்க முயன்றவரை போலீஸார் கைது செய்யாமல் எச்சரித்து அனுப்பினர். பிரிட்டன், கனடா நாடுகளில் இருக்கும் காலிஸ்தான் ஆதரவாளர்கள் மீது நடவடிக்கை எடுக்க நீண்ட காலமாக அந்நாடுகளுக்கு இந்தியா கோரிக்கை விடுத்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

'பாக்., வெளியேறினால்..' தொடர்ந்து, லண்டனில் உள்ள சவுதம் ஹவுஸில் நடைபெற்ற கலந்துரையாடல் நிகழ்ச்சியில் காஷ்மீர் பிர்ச்சினை, ட்ரம்ப் வரிவிதிப்பு, சீன உறவு உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்தும் பேசினார்.

காஷ்மீர் பிரச்சினைக்கு ட்ரம்ப் உதவியை நாடி பிரதமர் மோடி தீர்வுகாண முடியுமா என்ற கேள்விக்கு பதிலளித்தபோது, "காஷ்மீரில், பெரும்பாலானவற்றை நாங்கள் சிறப்பாகச் சரிசெய்துள்ளோம். 370வது சட்டப் பிரிவை நீக்கியது அதில் முதல் படி. அங்கே வளர்ச்சி, பொருளாதார நடவடிக்கைகள், சமூக நீதியை மீட்டெடுத்தது இரண்டாவது நகர்வு. மிக அதிகப்படியான வாக்குப்பதிவுடன் நடத்தப்பட்ட தேர்தல் மூன்றாவது படியாகும். நாங்கள் காத்திருக்கும் பகுதி, சட்டவிரோத பாகிஸ்தான் ஆக்கிரமிப்பில் உள்ள காஷ்மீரின் 'திருடப்பட்ட' பகுதியைத் திரும்பப் பெறுவது என்று நினைக்கிறேன். அது முடிந்ததும், காஷ்மீர் பிரச்சினை முற்றிலுமாக தீர்க்கப்படும்.

காஷ்மீரில் நிலவும் மனித உரிமைப் பிரச்சினைகளில் சில விஷயங்களில் அரசு கூடுதல் கவனம் செலுத்துவதும், தீர்வு காண்பதும் அவசியமாக இருக்கலாம். ஆனால் உலகளவில் ஒப்பிட்டுப் பார்த்தால் இந்தியா மனித உரிமைகளைப் பேணுவதில் வலுவாக இருக்கிறது." என ஜெய்சங்கர் பதிலளித்தார்.

## தமிழிசை சவுந்தரராஜன் சென்னையில் திடீர் கைது.. போலீசாருடன் வாக்குவாதம்.. பரபரப்பு!

சென்னை, மார்ச்.7



மும்மொழி கொள்கைக்கு தமிழக அரசு எதிர்ப்பு தெரிவித்து வருகிறது. ஆனால் மும்மொழி கல்விக் கொள்கையை ஏற்றால்தான் தமிழகத்திற்கான கல்வி நிதியை வழங்குவோம் என மத்திய அரசு முரண்டு பிடித்து வருகிறது. இதற்கு தமிழக அரசியல் கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்து வருகின்றனர். இந்தி திணிப்பை ஏற்க முடியாது என அரசியல் கட்சிகள் கூறி வரும் நிலையில், இந்தி வேண்டாம் என்றால் மலையாளம், தெலுங்கு, கன்னடம், ஃபிரெஞ்சு போன்ற ஏதாவது ஒரு மொழியை எடுத்து படிக்கலாம் என பாஜக கருத்து தெரிவித்து வருகிறது.

கூடுதலாக ஒரு மொழியை அரசுப் பள்ளி மாணவர்கள் கற்பதில் என்ன தவறு என்ன என்றறும் பாஜக தரப்பில் கேள்வி எழுப்பப்பட்டு வருகிறது. இந்நிலையில் மும்மொழி கொள்கைக்கு ஆதரவாக தமிழக பாஜக சார்பில் 'சமக்கல்வி எங்கள் உரிமை' என்ற தலைப்பில் நேற்று கையெழுத்து இயக்கம் தொடங்கப்பட்டுள்ளது.

சென்னை அமைந்தகரையில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் கையெழுத்து இயக்கத்தை தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை முன்னிலையில், முன்னாள் தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் தொடங்கி வைத்தார்.

சமக்கல்வி இணையதளம், சமக்கல்வி பாடல் ஆகியவையும் அறிமுகம் செய்யப்பட்டன. முன்னாள் மத்திய அமைச்சர் பொன்.ராதாகிருஷ்ணன், ஹெச்.ராஜா, பாஜக மேலிட இணை பொறுப்பாளர் சுதாகர் ரெட்டி உள்ளிட்ட நிர்வாகிகள் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். இந்நிலையில் தமிழக பாஜக மூத்த தலைவரும் முன்னாள் ஆளுநருமான தமிழிசை சவுந்தரராஜன் சென்னை எம்ஜிஆர் நகரில் கையெழுத்து இயக்கம் நடத்தினார்.

தடையை மீறி கையெழுத்து இயக்கம் நடத்தியதால் தமிழிசை சவுந்தரராஜனை போலீசார் கைது செய்தனர். இன்னொரு நாள் அனுமதியுடன் கையெழுத்து இயக்கத்தை நடத்துங்கள் என போலீசார் தெரிவித்தனர்,

ஆனால் அதனை ஏற்க மறுத்த தமிழிசை சவுந்தரராஜன், எந்த ஆர்ப்பாட்டமும் போராட்டமும் இல்லாமல் அமைதியாக நடத்தப்படும் போது எதற்காக கைது செய்கிறீர்கள் என வாக்குவாதத்தில் ஈடுபட்டார்.

மேலும் போலீசாரின் வாகனத்தில் ஏறவும் தமிழிசை சவுந்தரராஜன் மறுப்பு தெரிவித்தார். பாமர மக்கள் தாமாக முன்வந்து மும்மொழிக்கு ஆதரவாக கையெழுத்திடுவதாகவும் தமிழிசை சவுந்தரராஜன் தெரிவித்தார்.

## 'சிம்பொனி இசை மட்டுமல்ல, இளையராஜாவும் இந்தியாவுக்குப் பெருமை' அன்புமணி புகழாரம்!

சென்னை, மார்ச்.7



சிம்பொனி இசை மட்டும் இல்லை இளையராஜாவும் இந்தியாவுக்கு பெருமை என்று பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அன்புமணி தனது எக்ஸ் தள பதிவில், 'வேலியண்ட்' என்ற தலைப்பில் உருவாக்கியுள்ள சிம்பொனி இசைக்கோர்வையை அரங்கேற்றுவதற்காக இசையமைப்பாளர் இளையராஜா லண்டன் சென்றிருக்கிறார். நாளை மறுநாள் லண்டனில் அவர் தமது சிம்பொனி இசைக்கோர்வையை அரங்கேற்றம் செய்கிறார். வரலாற்று சிறப்பு மிக்க அந்த நிகழ்ச்சி வெற்றி பெறவும், சிறப்பாக அமையவும் எனது உளமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆயிரம் திரைப்படங்களுக்கு மேல் இசையமைத்தவர் இளையராஜா. ஐந்தாயிரம் பாடல்களுக்கு மேல் படைத்து, அவற்றை நமது மனநிம்மதிக்கும், மகிழ்ச்சிக்கும் மருந்தாகக் கொடுத்தவர் அவர். இசையின் உச்சத்தை என்றோ அவர் தொட்டுவிட்டதாக நாமெல்லாம் கூறிக் கொண்டிருக்கிறோம். ஆனால், அந்த இசை மருத்துவர் தமது இசை வாழ்வின் புதிய உச்சங்களைத் தேடித் தேடிச் சென்று சாதனை படைத்துக் கொண்டிருக்கிறார்.

அடிப்படையில் இளையராஜா இசையமைப்பாளர் அல்ல. அவர் இசையை இயற்றுபவர். இசையில் ஆய்வுகளையும், புதிய புதிய தேடல்களையும் நிகழ்த்துபவர்களின் இலக்கு சிம்பொனி இசைக்கோர்வையை படைப்பது தான். சிம்பொனி இசைக்கோர்வைகளை விட சிறந்த இசையை அவர் ஏற்கனவே படைத்திருக்கிறார்.

எனினும், சிம்பொனி இசையை ஆவணப்படுத்துவதற்காகவே அவர் 'வேலியண்ட்' படைத்திருக்கிறார். இதன் மூலம் ஜோசப் ஹேடன், வூல்ஃப்காங் அமாடியஸ் மொசார்ட், லுட்விக் வான் பீத்தோவன், பிராண்ஸ் சூபேர்ட், ஃபீலிக்ஸ் மெண்டல்சன் உள்ளிட்டோரின் வரிசையில் இளையராஜாவும் இடம் பெறுவார். இது அவருக்கு மட்டுமல்ல, ஒட்டுமொத்த இந்தியர்களுக்கும் பெருமையாகும்.

லண்டன் செல்லும் முன் விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய இளையராஜா, "சிம்பொனி இசை நிகழ்ச்சியை நடத்துவது எனக்கான பெருமை அல்ல; இந்த நாட்டின் பெருமை." என்று பெருமிதத்துடன் கூறினார். உண்மையில் சிம்பொனி இசை மட்டுமல்ல இசைக்கடவுள் இளையராஜாவே இந்தியாவுக்குப் பெருமை தான். அதை வேலியண்ட் நிரூபிக்கும். வாழ்த்துகள் ராஜா." என்று தெரிவித்தார்.

சிவகங்கை சேர்ந்தவர் சித்திரை அழகு (72) சாலை விபத்தில் கால் இழந்துள்ளார். அவர் தற்போது சிவகங்கை மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு கண் பரிசோதனை செய்வதற்காக இரண்டு மாடி 39 படி நடக்க முடியாத சூழ்நிலை அவர் வீட்டில் இருந்து கொண்டுவரப்பட்டர் நாற்காலி வைத்துக்கொண்டு மருத்துவமனை உள்ளே நாற்காலி நகட்டி நகர்த்தி நடந்து சென்றார் அங்கு பணிபுரியும் ஊழியர்கள் அவரை யாரும் கண்டுகொள்ளவில்லை என்பது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது..



# வேலூரில் பாஜக அலுவலகம் திறப்பு விழா மாவட்ட அளவில் முக்கிய தலைவர்கள் பங்கேற்பு





வேலூர் மார்ச் 7

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, சென்னை பெங்களூர் தேசிய நெடுஞ்சாலை காகிதப் பட்டறை அருகே, பாரதிய ஜனதா கட்சி அலுவலகம் திறப்பு விழா, சிறப்பு பூஜைகள், கணபதி ஓமம் உள்ளிட்ட பூஜைகள் செய்து கோலாகலமாக பா.ஜ.க. அலுவலகம் திறப்பு விழா மாவட்டத் தலைவர் தசரதன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாநில பொதுச் செயலாளர் கார்த்தியாயினி, மாவட்ட அளவிலான தலைவர்கள் மற்றும் பொறுப்பாளர்கள் பங்கேற்று குத்துவிளக்கேற்றி திறந்து கட்சித் தொண்டர்களுக்கும், பொதுமக்களுக்கும் இனிப்புகள், பழங்கள், மற்றும் குளிர்பானங்கள் வழங்கி திறப்பு விழாவானது கோலாகலமாக சிறப்பித்தனர்.

இந்நிகழ்ச்சியில் கோட்ட பொறுப்பாளர் குணசேகரன், வர்த்தக அணி மாநில செயலாளர் இளங்கோ, மாவட்ட துணைத் தலைவர் ரூபாவதி, விளையாட்டு மற்றும் திறன் மேம்பாட்டு பிரிவு மாவட்ட தலைவர் எம்.கே.சூர்யா, துணைத் தலைவர் ஜெயமூர்த்தி, மாவட்ட செயலாளர் ரமணா, காட்பாடி தெற்கு மண்டல தலைவர் நந்தகுமார், சரவணகுமார், சத்துவாச்சாரி ஜெகன், வி.எஸ்.சி. வெங்கடேசன், சக்கரவர்த்தி, அம்மன் சிவராமன், சத்துவாச்சாரி ஜெய் ஸ்ரீகாந்த், நெட் சென்டர் உதயகுமார், தினேஷ், பிச்சாண்டி, மூர்த்தி, சங்கர், சுமதி, மனோகர், சுகுணா, சுகன்யா, ஜெய்சங்கர், நந்தகுமார், செல்வராஜ், ராகவ கிருஷ்ணா, அசோக், மதியழகன், சுகுமார் சதீஷ்குமார், ஜாபர், ஜபீர், உட்பட ஏராளமான பா.ஜ.க.வினர் மற்றும் இந்து அமைப்பினர் என பலர் கலந்து கொண்டனர்.

# கூடலூர் அருகே ஆண் புலி இறப்பு



நீலகிரி மாவட்டம் கூடலூர் நெலாக்கோட்டை வனச்சரகம், பென்னை காப்புக்காடு, விலங்கூர் காவல்பகுதி எடக்கோடு வயல் பகுதியில் சரக பணியாளர்கள் களத்தணிக்கை மேற்கொள்ளும்போது ஆண் புலி ஒன்று இறந்து கிடப்பது கண்டறியப்பட்டது. NTCA வழங்கியுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி (SoP) இன்று பிரேத பரிசோதனை செய்யப்படவுள்ளது ..

# நீலகிரி மாவட்டத்தில் ரத்து செய்யப்பட்ட அரசு பேருந்துகளை மீண்டும் இயக்க வலியுறுத்தல்



குன்னூர், மார்ச்7

நீலகிரி மாவட்டத்தில் மினி பேருந்துகளுக்காக ரத்து செய்யப்பட்ட 101 பழைய வழித்தடங்களில் மீண்டும் அரசு பேருந்துகளை இயக்க கோரிக்கை விடப்பட்டுள்ளது. தமிழகத்தில் நீலகிரி மாவட்டத்தில்தான் முதல் முதலாக தனியார் பேருந்துகள் அரசுடமையாக்கப்பட்டதால் இங்கு மட்டுமே அதிகளவில் அரசு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகிறது. இதனிடையே கடந்த 2000 ம் ஆண்டு நகரப் பகுதியில் இருந்து கிராமப்புற பகுதிகளுக்கு செல்லும் முக்கியசாலைகளை அறிமுகப்படுத்தும் மினி பேருந்துகள் அறிமுகம் செய்யப்பட்டது.இதில் குன்னூர், ஊட்டி, ,கோத்தகிரி, கூடலூர் ஆகிய நகரங்களை ஒட்டியுள்ள பகுதிகளில் 101 மினி பேருந்துகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது இதனால் இவ்வழியே இயக்கப்பட்டு வந்த அரசு பேருந்துகள் நிறுத்தப்பட்டது.இதில் முக்கிய சாலையில் இருந்து மிக முற்பகுதியில் உள்ள கிராமங்கள் இணைக்கும் வகையில் மினி பேருந்துகளை அரசு உத்தரவை மீறி இயக்கப்படுகிறது. இதனால் மலை கிராம மக்கள் பெரும் சிரமத்திற்கு உள்ளாகி வருகின்றனர். குறிப்பாக கிராமப்புற மக்கள் பெரும் அவதிக்குள்ளாகி வருகின்றனர்.

# காட்பாடியில்போக்ஸோ சட்டம் குறித்து மாணவ மாணவிகளுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சி




காட்பாடி மார்ச் 7

காட்பாடியில், வேலூர் அரசு சட்ட கல்லூரி மற்றும் டான் பாஸ்கோ மெட்ரிகுலேஷன் உயர்நிலை பள்ளி இணைந்து போக்ஸோ சட்டம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, வேலூர் அரசு சட்டக் கல்லூரி மற்றும் டான் பாஸ்கோ மெட்ரிகுலேஷன் உயர்நிலை பள்ளி இணைந்து போக்ஸோ சட்டம் குறித்த விழிப்புணர்வு நிகழ்வினை, 6ம் வகுப்பு முதல் 9ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு போக்ஸோ சட்டம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தினர். குழந்தைகளின் உரிமைகள் மற்றும் போக்ஸோ சட்டத்தை மையமாக கொண்டு பேச்சு, கட்டுரை மற்றும் ஓவிய போட்டிகளும் நடைபெற்றது. பள்ளி முதல்வர் கிருபாகரன் முன்னிலையில், பேராசிரியர் முனைவர் கே.லதா, முதல்வர் அரசு சட்ட கல்லூர வேலூர். இந்நிகழ்ச்சியை தலைமை தாங்க, மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கபட்டன. இளைஞர் செஞ்சிலுவை சங்கத் திட்ட அலுவலர் முனைவர் சா.ஹெப்சிபா பியூலா ஒருங்கிணைப்பில் வேலூர் சட்டக் கல்லூரி மாணவர்கள் கலை நிகழ்ச்சிகள் மூலமாக இவ்விழிப்புணர்வை பள்ளி மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்தினர்...

# திருப்பூர் மாவட்டத்தில் நாளை சிறப்பு குறைதீர்க்கும் முகாம்

திருப்பூர், மார்ச்.7

திருப்பூர் மாவட்டத்தில் பொது விநியோகத் திட்ட சிறப்பு குறைதீர்க்கும் முகாம் நாளை (08/03/2025) காலை 10 மணி முதல் மதியம் ஒரு மணி வரை அனைத்து வட்டங்களிலும் கீழ்க்கண்ட இடங்களில் நடைபெற உள்ளது இக்குறைதீர்ப்பு முகாமில் திருப்பூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து கொடுமை பொருள் தனி வட்டாட்சியர்கள் வட்ட வழங்கல் அலுவலர்கள் மற்றும் தனி வருவாய் அலுவலர்கள் கலந்து கொண்டு முகாமில் பெறப்படும் மனுக்களுக்கு உடனடியாக தீர்வு செய்ய உள்ளனர். முகாமில் பொதுமக்கள் குடும்ப அட்டைகளில் பெயர் சேர்த்தல் , நீக்கம் முகவரி கைபேசி எண் பதிவு/மாற்றம் செய்தல், புதிய குடும்ப அட்டை நகல் அட்டை கோரும் மனுக்கள் பதிவு செய்தல் போன்றவைகள் மின்னணு குடும்ப அட்டை கோரிக்கை தொடர்பாக நிவர்த்தி செய்ய இந்த அரிய வாய்ப்பினை தவறாது பயன்படுத்திக் கொள்ளுமாறு மாவட்ட ஆட்சியர் கிறிஸ்துராஜ் தகவல் தெரிவித்துள்ளார்

# திருப்பூர் முதல்வர் மருந்தகங்களை ஆட்சியர் ஆய்வு



திருப்பூர் மார்ச்7

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் சுதந்திர தினத்தன்று தமிழகம் முழுவதும் 1000 முதல்வர் மருந்தகங்கள் திறக்கப்படும் என தெரிவித்தார் கடந்த 24/02/2025 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் முதல்வர் மருந்தகங்களை தமிழக முழுவதும் காணொளி காட்சி வாயிலாக திறந்து வைத்தார். அவ்வகையில் திருப்பூர் மாவட்டத்தில் மட்டும் 17 முதல்வர் மருந்தகங்கள் துவங்கப்பட்டு அவற்றில் கூட்டுறவு சங்கங்கள் மூலம் 13 மருந்தகங்கள் பழங்கரை, சோமவரப்பட்டி, ருத்ர பாளையம், முத்தூர், வெள்ளக்கோவில், தளி, ஊத்துக்குளி, அவிநாசி, சின்ன வீரம்பட்டி, கரடி வாலி, மங்கலம், சிவன்மலை மற்றும் பெருமாநல்லூர் 4 மருந்தகங்கள் தொழில் முனைவோர் மூலம் வெள்ளியங்காடு (திருப்பூர்), சுள்ளிப்பாளையம்(அவிநாசி), வள்ளகுண்டபுரம்(உடுமலை) , ஊதியூர் (குண்டடம்) பல இடங்களில் துவங்கப் பட்டுள்ளது. கூட்டுறவு சங்கங்களின் முதல்வர் மருந்தகங்களுக்கு இரண்டு லட்சம் மானியமாகவும் தொழில் முனைவோரின் முதல்வர் மருந்தகங்களுக்கு மூன்று லட்சம் மானியம் ஆகும் வழங்கப்பட்டது. இம்மரந்தகங்களில் வெளிச்சந்தையை காட்டிலும் 25% முதல் 90% வரை தள்ளுபடி விற்பனையில் ஜெனரிக் மருந்துகள் பிரேண்டடு மருந்துகள் மற்றும் பிற மருந்துகள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது இத்தள்ளுபடியை பயன்படுத்தி பொதுமக்கள் குறைவான விலையில் தரமான மருந்துகளை வாங்கி பயனடையலாம். திருப்பூர் மாவட்டம் பல்லடம் வட்டம் மங்கலம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் செயல்படும் முதல்வர் மருந்தகத்தில் மாவட்ட ஆட்சியர் கிறிஸ்து ராஜ் நேற்று ஆய்வு மேற்கொண்டார்.உடன் துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்..

# செங்கல்பட்டு மேற்கு மாவட்ட தாம்பரம் பகுதி அதிமுக பொதுக்கூட்டம்

தாம்பரம் மார்ச் 7

செங்கல்பட்டு மேற்கு மாவட்டம் தாம்பரத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் 2026 சட்டமன்றத் தேர்தலில் 200 தொகுதிகளுக்கு மேல் கழகம் அமோக வெற்றி பெறும் என்று கழக அமைப்புச் செயலாளர், முன்னாள் அமைச்சர் கே.ஏ. செங்கோட்டையன் பேசினார்.

இதயதெய்வம் அம்மா அவர்களின் 76வது பிறந்தநாளையொட்டி செங்கல்பட்டு மேற்கு மாவட்டம், தாம்பரம் சட்டமன்றத் தொகுதி சார்பில் மாபெரும் பொதுக் கூட்டம் மேற்கு தாம்பரம் சண்முகா சாலையில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு தாம்பரம் மத்திய பகுதி கழகச் செயலாளர் மாவட்ட இலக்கிய அணி செயலாளர் எல்லார் செழியன் தலைமை வகித்தார்.

தாம்பரம் கிழக்கு பகுதி கழகச் செயலாளர் எம்.கூத்தன், தாம்பரம் மேற்கு பகுதி கழகச் செயலாளர் ஏ.கோபிநாதன், பொதுக்குழு உறுப்பினர் தா.மு.துரைவேல், பகுதி, ஒன்றியக் கழகச் செயலாளர்கள் இரா.மோகன், எம்.தேவேந்திரன், ஜெ.சீனுபாபு, மதுரப்பாக்கம் எம்.பி.மனோகரன், மாவட்ட மருத்துவ அணிச் செயலாளர் டாக்டர் பாலாஜி ஸ்ரீகாந்த், மற்றும் நிர்வாகிகள் ஜி.ஹரிபாபு, கே.தனலட்சுமி, ஆர்.சுலோச்சனா, எம்.வேலு, இ.வி.சம்பத், ப.வெங்கட்ராமன், எஸ்.மாரி, டீ.டி.தில்லைராஜ், எம்.கே.நாகூர்கனி, கே.ரகு, ஏ.கே.ராஜாராம், எம்.பால





கணேஷ் ஆகியோர் வரவேற்புரையாற்றினர்.

வட்டக் கழகச் செயலாளர்கள் வி.பாலாஜி, எஸ்.ஜேசுராஜ், பல்லவன் பி.நாராயணசாமி, டி.பார்த்தசாரதி, மெடிக்கல் எம்.வெங்கடேசன், ஆர்.சிவக்குமார், எம்.குமணன், வி.டில்லிகுமார், எஸ்.வெற்றிச்செல்வன், கேபிள் குணா, இரா.நாகராஜன், பி.ராஜா, கி.கிருஷ்ணமூர்த்தி, ஆர்.பூபதி, ஆர்.ஆறுமுகம், கே.தேவராஜ், எஸ்.தயாளன், பி.காத்தவராயன், என்.பிரகாஷ்குமார், கே.பாஸ்கர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் கழக அமைப்புச் செயலாளர், முன்னாள் அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன், தலைமைக் கழகப் பேச்சாளர் திரைப்பட இயக்குனர் நடிகர் ஆர்.சுந்தர்ராஜன், செங்கல்பட்டு மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிட்லபாக்கம் ச.இராசேந்திரன், அனைத்துலக எம்.ஜி.ஆர். மன்றத் தலைவர் முன்னாள் அமைச்சர் டி.கே.எம்.சின்னையா ஆகியோர் சிறப்புரையாற்றினர் இக்கூட்டத்தில் கழக மகளிர் அணி இணைச் செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கணிதா சம்பத், மாவட்டக் கழக துணைச் செயலாளர் முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் ப.தன்சிங், முன்னாள் ஒன்றியக் குழுத் தலைவர் என்.சி.கிருஷ்ணன், மாவட்டக் கழகப் பொருளாளர் பி.கே.பரசுராமன், கழக இலக்கிய அணி துணைச் செயலாளர் கே.எஸ்.மலர்மன்னன், தலைமைக் கழகப் பேச்சாளர் எஸ்.மூர்த்தி, பகுதி கழகச் செயலாளர்கள் அனகை பி.வேலாயுதம், பா.அப்பு (எ) வெங்கடேசன், ஆர்.எஸ்.சுபாஷ், மாவட்ட எம்.ஜி.ஆர். இளைஞர் அணி செயலாளர் ஜி.எஸ். புருஷோத்தமன், மண்டலக தகவல் தொழில்நுட்பப் பிரிவு இணைச் செயலாளர் சபரீஷ் மணிகண்டன், மாவட்ட மகளிர் அணி நிர்வாகிகள் ஆர்.அமுதா, சி.சுபாஷினி, வி.கே.ரகுபதி, ஏ.எம்.சேகர், மற்றும் ஆர்.அக்பர் அலி, பீர்முகம்மது, போர்வெல் வி.ரவிச்சந்திரன், மாவட்ட தகவல் தொழில்நுட்பப் பிரிவு நிர்வாகிகள் எஸ்.செந்தில் குமார், பி.ஜி.ராஜ்குமார், வி.வினோத்குமார், தாம்பரம் மாநகராட்சி எதிர்க் கட்சித் தலைவர் சேலையூர் ஜி.சங்கர், தாம்பரம் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள் சி.சாய் கணேஷ், வாட்டர் கே.ராஜ், சுபாஷினி புருஷோத் தமன், வாணிசுரேஷ்பாபு, தாம்பரம் மேற்கு பகுதி கழக நிர்வாகிகள் பி.மோகன்ராஜ், இ.வெங்கடேசன், தேவி ஸ்ரீதரன், தாம்பரம் கிழக்கு பகுதி கழக நிர்வாகிகள் இ.சுசீலா, என்.சாரதா, எஸ்.மலர் லட்சுமி, எஸ்.லோகநாயகி, கே.எம்.கார்த்திகேயன் உட்பட திரளான கழகத்தினர் கலந்துகொண்டனர்.

கூட்ட முடிவில் தாம்பரம் மாநகர மத்திய பகுதி மாவட்ட பிரதிநிதி மார்க்கட் எஸ்.காசி, 49வது தெற்கு வட்டக் கழகச் செயலாளர் வாழை எம்.பெரியசாமி, முன்னாள் நகரமன்ற உறுப்பினர் மார்க்கெட் ஜி.பாபு ஆகியோர் நன்றியுரையாற்றினர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை தாம்பரம் மத்திய பகுதி கழகச் செயலாளர், மாவட்ட இலக்கிய அணி செயலாளர் எல்லார் செழியன் செய்திருந்தார்..

# சிவகங்கையில் மருத்துவர்கள் அலட்சியத்தால் வலியில் துடித்த நோயாளிக்கு மறு அறுவை சிகிச்சை





சிவகங்கை மார்ச்.7

சிவகங்கை நகராட்சி வ. உ. சி. தெருவைச் சேர்ந்த ரஹீம் (50) என்பவர் இடது காலில் காயம்பட்டு சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டார்.

அங்கு அவருக்கு சர்க்கரை நோய் இருந்ததால் விரலை அகற்ற மருத்துவர்கள் அறிவுறுத்தினர்.

விரலை அகற்றிய பின் ரஹீமுக்கு மருந்து செலுத்தகையில் வென்பிளான் குத்தப்பட்டு மருந்துகளும், குளுக்கோஸூம் செலுத்தப்பட்டன. சிகிச்சை முடிந்து வீட்டிற்கு சென்ற ரஹீமுக்கு வென்பிளான் குத்திய இடத்தில் அதிக வலி ஏற்பட்டது. கையின் உள்ளே ஏதோ பொருள் இருப்பதுபோல் உணர்ந்துள்ளார்.இதனால்



மீண்டும் மருத்துவமனைக்கு சென்ற ரஹீமுக்கு நரம்பில் சுருக்கம் இருப்பதாகவும் மீண்டும் அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என மருத்துவர்கள் தெரிவித்து தற்போது மறு அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. அப்போது அறுவை சிகிசையில் வெண்பிளானில் உள்ள பிளாஸ்டிக் ஊசியை உள்ளே இருந்து அகற்றியதாக கூறப்படுகிறது. ஏற்கனவே மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் ஊசியை சரியாக எடுக்காமல் அலட்சியமாக செயல்பட்டது தெரியவந்துள்ளது. எனவே சம்மந்தப்பட்ட மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என ரஹீம் கோரிக்கை விடுத்துள்ளார். இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## தமிழக முதல்வர் பிறந்தநாளையொட்டி பேபி உயர்நிலைப் பள்ளியில் மாணவ மாணவிகளுக்கும் உபகரணங்கள் வழங்கல்





தாம்பரம் மார்ச்.7

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு தாம்பரம் மாநகராட்சி 4வது மண்டலம் 49வது வார்டில் உள்ள பேபி உயர்நிலைப் பள்ளியில் திமுக நிர்வாகி இ.நவின் அவர்களின் ஏற்பாட்டில் கழக கொடியை கோ.ராஜேந்திரன் ஏற்றி வைத்தார் அதன் பின்னர் 4வது மண்டலக்குழு தலைவர் பகுதி கழக செயலாளர் டி.காமராஜ் இனிப்புகளை வழங்கி பின்னர் பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதும் அனைத்து மாணவ மாணவிகளுக்கும் தேர்விற்கு தேவையான உபகரணங்களை வழங்கினார் உடன் இரா.ரவிக் குமார், கீ.வேல்மணி, கோ. இராஜேந்திரன், இரா.கந்த சாமி, பி.காளியப்பன், ஆர்.செல்வ குமார், எல்.பெரிய நாயகம் எம்சி, சித்திரம் வாசு, எம்.கன்னி யப்பன், ச.ராஜேஷ், கடப்பேரி ராஜா, எம்.கணபதி, எம்.ரவி, செந்தில், ராமச்சந்திரன், பி.ஹரிஷ், கா.மு.சூரியா, கே.எம்.தாஸ், திவாகர், ஜே.டேவிட், இரா.கோபி மாலை கடை ராஜிவ்காந்தி, அர்ஷத், வாட்டர் மோகன், திருநீர்மலை புருஷோத்தமன், சந்தோஷ், குரு மணி, மோ.லட்சுமி, லட்சுமி உட்பட பகுதி, வட்ட கழக நிர்வாகிகள் பள்ளி மாணவ மாணவிகள் ஆசிரியர்கள் பலர் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்..



கன்னியாகுமரியில் மத்திய அரசின் புதிய கல்விக் கொள்கைக்கு ஆதரவாக கிழக்கு மாவட்ட பாஜக சார்பில் திங்கள்நகர் பகுதியில் பொதுமக்களிடம் கையெழுத்து இயக்கம் நேற்று துவங்கியது.இந்த கையெழுத்து இயக்கத்தை கிழக்கு மாவட்ட பாஜக தலைவர் கோபகுமார் துவக்கி வைத்தார். இதில் ஏராளமானோர் கலந்து கொண்டு மும்மொழிக்கு ஆதரவாக கையொப்பம் இட்டனர்.

## இளையான்குடி ஒன்றியம் முனை வெற்றியில் நூற்றாண்டு விழா







இளையான்குடி மார்ச்.7

சிவகங்கை மாவட்டம் இளையான்குடி ஒன்றியம், முனைவென்றி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் கடந்த 05 03 2025 அன்று புதன்கிழமை நூற்றாண்டு விழா மிகச்சிறப்பாக கொண்டாடப்பட்டது.

இவ்விழாவிற்கு வட்டார கல்வி அலுவலர் பால்டேவிட் ரொசாரியோ தலைமை தாங்கினார், வட்டார வள மைய மேற்பார்வையாளர் பிரான்சிஸ், பள்ளிமேலாண்மை குழு தலைவர் பானுப்பிரியா முன்னிலை வகித்தனர்.மேலும் ஆசிரியர் பயிற்றுநர் பிரசன்னா,பள்ளிமேலாண்மை குழு உறுப்பினர்கள், முன்னாள் மாணவர்கள், சுற்றுவட்டார ஆசிரியர்கள், பெற்றோர்கள், கிராம பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண் டனர். பள்ளி தலைமையாசிரியர் கார்த்திகைச் செல்வி, ஆசிரியர்கள் ஜான்சன் அந்தோணி தாஸ், வைதேகி, கோமதி, ஜெனிசா அன்பரசி ஆகியோர் விழாவிற்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

## திருப்பூரில் மினி பேருந்து இயக்க விண்ணப்பிக்கலாம்

திருப்பூர் மார்ச் 7



தமிழ்நாடு அரசு உத்தரவின் படி திருப்பூர் மாவட்டத்தில் 85 புதிய மினி பஸ் வழித்தடங்கள் ஆய்வு செய்யப்பட்டு மாவட்ட அரசுதழில் வெளியிட்டுள்ளன இந்த 85 வழித்தடத்திலும் மினி பேருந்து இயக்க விருப்பம் உள்ளவர்கள் 15/03/2025 தேதிக்குள் தங்களது விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட வட்டார போக்கு வரத்து அலுவலகங்களில் சமர்ப்பிக்கவும் புதிய மினி பஸ் வழித்தடத்திற்கான விண்ணப்ப படிவம் (ஷிசிறிகி) பரிவாகன் இணையதளத்தில் பதிவிறக்கம் செய்யலாம் கட்டணம் ரூபாய் 1500/+சேவை கட்டணம் 100/ மொத்தம் =1600/ செலுத்தி பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவத்துடன் விலாச சான்றுக்கான ஆவணம் மற்றும் புதிய விண்ணப்பதாரராக இருந்தால் 30,000/ ஆயிரத்திற்கான செல்வநிலை சான்றிதழ் (solvency certificate) மற்றும் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் நேற்றைய தினம் திருப்பூர் மாநகராட்சி முத்தமிழ் அறிஞர் கலைஞர் மு.கருணாநிதி பேருந்து நிலையத்தில் புதிய மினி பேருந்து வழித்தடங்கள் தொடர்பாக மாவட்ட ஆட்சியர் கிறிஸ்து ராஜ் இன்று நேரில் சென்று ஆய்வுமேற்கொண்டார். உடன் வட்டாரப் போக்குவரத்து அலுவலர் வெங்கிடசாமி (திருப்பூர் வடக்கு மற்றும் தெற்கு) ஆய்வாளர்கள் நிர்மலா தேவி விஜயா மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்..

## பழனியில் செல்வப்பெருந்தகை தலைமையிலான சட்டப்பேரவை பொது கணக்குகுழு ஆய்வு

பழனி மார்ச்7



திண்டுக்கல் மாவட்டம் பழனிக்கு தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் செல்வபெருந்தகை தலைமையிலான சட்டப்பேரவை பொதுகணக்கு குழு வருகை தந்தது. சட்டமன்ற உறுப்பினர்கள் செந்தில்குமார், சந்திரன் , கிருஷ்ணமூர்த்தி உள்ளிட்டோர் வருகை தந்தனர்.

ரோப் கார் மூலம் மலைக் கோயிலுக்கு சென்ற மதிப்பீட்டு குழு உறுப்பினர்கள், பக்தர்களுக்கு நாள் முழுவதும் வழங்கப்படும் அன்னதானத் திட்டத்தை ஆய்வு செய்தனர். தொடர்ந்து பழனி நகராட்சி சார்பில் 11.32 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் காந்தி மார்க்கெட் பணிகளை ஆய்வு செய்தனர்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக பணிகள் நடைபெறு வருகிறது. விரைவாக பணியை முடிக்க ஒப்பந்ததாரரை அறிவுறுத்தினர். தொடர்ந்து பழனி நகராட்சி ஆண்கள் பள்ளியில் செயல்பட்டு வரும் அறிவு சார் மையத்தை ஆய்வு செய்தனர்.



திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பெறப்பட்ட புகாரின் அடிப்படையில் அனுப்பர்பாளையம் பகுதிகளில் உள்ள சுற்றி திரிந்த நாய்களை மாநகராட்சி மற்றும் தொண்டு நிறுவனம் இணைந்து திறனாய்வுகளை பாதுகாப்பான முறையில் அகற்றினர்.

## தாம்பரம் மாநகர வர்த்தகர் அணி துணை அமைப்பாளரின் தாயார் படத்திறப்பு நிகழ்ச்சி

செங்கல்பட்டு, மார்ச்.7





செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகர வர்த்தகர் அணி துணை அமைப்பாளர் இரா.செல்வகுமார் அவர்களின் தாயார் பெருங்களத்தூர் வடக்கு பகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் செ.செல்வபிரகாஷ் தாம்பரம் மாநகர தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் எஸ்.மகேஷ் பாட்டி ஆர்.தனம்மாள் அவர்கள் படத்திறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் தாம்பரம் மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்எல்ஏ., அவர்கள் கலந்து கொண்டு ஆர்.தனம்மாள் அவர்களுடைய திருவுருவ படத்தினை திறந்து வைத்து வணங்கினார் அதை தொடர்ந்து 2நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் தமிழக உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோ.வி.செழியன் , வர்த்தக அணி செயலாளர் கவிஞர் கசிமுத்துமாணிக்கம், கலந்து கொண்டு திருவுருவ படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தி வணங்கினார். உடன் தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் ஜி.காமராஜ், மண்டல குழுத்தலைவர்கள் டி.காமராஜ், எஸ்.இந்திரன் மற்றும் தலைமை கழக பேச்சாளர் சேப்பாக்கம் பிரபாகரன் மாமன்ற உறுப்பினர்கள் செ.சுரேஷ், பி.ஜோதிகுமார், ரமணி ஆதிமுலம் எல்.பெரியநயகம், கொடி.தாமோதரன், பகுதி கழக நிர்வாகிகள் ஜா.ரவிக்குமார், கி.வேல்மணி ஆர்.செல்வகுமார், மா.கன்னியப்பன், பி.காளியப்பன், ஆர்.ஜீவன், என்.ஷாஜகான், டி.கே. தாமஸ், கல்யாணி மன்ராஜ் எம்.வினோத், ஆர்.அகஸ்டின், சீ.செழியன், எஸ்.கார்த்திக், எம்.சூர்யா, வாட்டர் மோகன், நவீன், செ.முகுந்தன், வினோத், ஹரிஹரன், திருமுடிவாக்கம் பாக்கியராஜ், எம்.நாகராஜ், மனோகர் மற்றும் கழக தோழர்கள் அனைவரும் கலந்து கொண்டு மலர் தூவி வணங்கினார்கள்.

## வள்ளிமலை சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் பிரம்மோற்சவ விழா கொடியேற்றத்துடன் துவங்கியது





காட்பாடி மார்ச் 7

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, வள்ளிமலை சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் புகழ்பெற்ற கோவிலாகும். இந்த ஆலயத்தின் புகழ் பெற்ற விழாவானது பிரம்மோற்வ விழா, இவ்விழா தொடக்கமாக 0403 2025 செவ்வாய்கிழமையன்று அதிகாலை கொடியேற்றதுடன் துவங்கியது. வேத மந்திரங்கள் முழங்க சிறப்பு பூஜைகள் செய்து, ஆலய நிர்வாகிகள் பக்தர்கள் அரோகரா.. அரோகரா... என்ற முழக்கமிட்டு ஆலயத்தில் உள்ள கொடி மரத்தில் பிரம்மோற்சவ கொடி ஏற்றப்பட்டது. உற்சவ முருகர் வள்ளி தெய்வானைக்கும் சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டது. மோஷிக வாகன மற்றும் மயில்வாகனங்களில் சுவாமி திருவீதி உலாவும் வெகு விமர்சியாக நடைபெற்றது. இந்த பிரம்மோற்சவ திருவிழா பத்தாம் தேதி வரும் திங்கட்கிழமை நடைபெற உள்ளது. இது குறித்து பாதுகாப்பு பாடுகளுக்கான ஆலோசனைக் கூட்டம் கோயில் வளாகத்தில் நடைபெற்றது. இதில் வேலூர் ஆர்.டி.ஓ. விஷ்ணுபிரியா, காட்பாடி தாசில்தார் ஜெகதீஸ்வரன், திருக்கோயில் செயல் அலுவலர் திருநாவுக்கரசு, எழுத்து மற்றும் திருக்கோயில் பணியாளர்கள் உற்சவ கமிட்டியினர் என பலர் கலந்து கொண்டனர். பிரம்மோற்சவ விழாவில் உள்ளூர் மற்றும் வெளியூர் என பக்தர்கள் திரளாக பங்கேற்று சுவாமி தரிசனம் செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.


## திருப்புவனத்தில் வீட்டிற்குள் கொள்ளையடித்துச் சென்ற தங்கச் சங்கிலி இதர பொருட்கள் மீட்பு! சிறையில் அடைக்கப்பட்ட கொள்ளையர்கள்











சிவகங்கை, மார்ச்.7

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் உச்சிகாளியம்மன் தெருவில் வசித்துவரும் அருணாச்சலம் (76) என்பவர் கடந்த 16/02/2025 அன்று அதிகாலை 3.10 மணியளவில் கழிப்பறை செல்வதற்காக வீட்டைத் திறந்து உள்ளார் அந்த நேரத்தில் மர்ம நபர்கள் வீட்டுக்குள் புகுந்து செல்போன் நகைகளை கொள்ளையடித்து சென்றனர். இவ்வழக்கில் குற்றவாளிகளை தேடப்பட்டு வந்த நிலையில் மதுரை மதிச்சியம் இஸ்மாயில் புரத்தை சேர்ந்த நந்தகுமார் என்ற வானவராயன் (27), கீரைத் துறையைச் சேர்ந்த முனி சரண்(29), அவனியாபுரத்தைச் சேர்ந்த லட்சுமி (52)திருட்டு சம்பவத்தில் ஈடுபட்டது தெரியவந்தது.

பின்னர் அவர்களிடம் கொள்ளையடித்துச் சென்ற தங்கச் சங்கிலி தோடு வெள்ளி பொருட்கள் இரண்டு விலை உயர்ந்த செல்போன்கள், சாதாரண செல்போன் ஆகிய பொருட்களை காவல்துறையினர் கைப்பற்றினார் பின்னர் நீதிபதி முன்பு ஆஜர் படுத்தப்பட்டு பின்னர் சிறையில் அடைத்தனர்.

மாலை தந்தி





தமிழ்நாடு துணை முதலமைச்சர் கழக இளைஞர் அணி செயலாளர் இளைய தலைவர் பம்மல் தெற்கு பகுதி செயலாளர் தாம்பரம் மாநகராட்சி 1வது மண்டலம் குழுத் தலைவர் பம்மல் வே.கருணாநிதி அவர்கள் தனது இளைய மகன் வே.க.தன்ராஜ்ன் திருமண விழா அழைப்பிதழை வழங்கினார். உடன் பம்மல் தெற்கு பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் செ.அமிர்தராஜ், பகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் அகிலன், பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் சீ.ஆகாஷ், வட்ட பிரதிநிதி டி.என்.ஜான்சன் இருந்தனர்.



மயிலாடுதுறை மாவட்டம் மக்கள் நல்வாழ்வு சமூக பாதுகாப்பு அமைப்பின் சார்பில் அரிவலூர் ஆதிதிராவிடர் நல தொடக்கப் பள்ளியில் உள்ள குழந்தைகளுக்கு நிறுவனத் தலைவர் ராஜேஷ் இன் ஆலோசனைப்படி சில பரிசு பொருள்கள் வழங்கப்பட்டுள்ளது இதில் நிறுவனப் பொதுச் செயலாளர் ஆதிலட்சுமி ஆனந்தராஜ் பள்ளியின் தலைமை ஆசிரியர் திலகவதி பள்ளியின் துணை தலைமை ஆசிரியர் சுகுணா மாநில ஆலோசகர் ராமன் மாநில துணை ஆலோசகர் பெஞ்சமின் மாநில இளைஞரணி தலைவர் தமிழ்ச்செல்வன் மாநில மகளிர் அணி தலைவர் சுபா மயிலாடுதுறை மாவட்ட இளைஞரணி தலைவர் அஜித் திருச்சி மாவட்ட மகளிர் அணி துணைத் தலைவர் காந்திமதி மயிலாடுதுறை மாவட்ட செயலாளர் கவியரசன் மயிலாடுதுறை மாவட்ட இளைஞரணி செயலாளர் அறிவழகன் மயிலாடுதுறை மாவட்ட முரசொலி மாறன் மயிலாடுதுறை மாவட்ட ஜெயா மற்றும் ஆசிரியர்கள் மற்றும் குழந்தைகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்



திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் அரசு மகளிர் கலை அறிவியல் கல்லூரியில் ஐம்பெரும் விழாவை முன்னிட்டு விளையாட்டுப் போட்டி நடைபெற்றது இப்போட்டியில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு பரிசுகளும் கேடயங்களும் வழங்கப்பட்டது இதில் முனைவர் உமாதேவி கல்லூரி முதல்வர் எனோலா செல்வி பர்வதா சிறப்பு விருந்தினராக கொடைக்கானல் காவல்துறை துணை கண்காணிப்பாளர் மதுமதி கலந்து கொண்டனர்.



திண்டுக்கல் மாவட்டம் பழனி பாலசமுத்திர பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் பேரூராட்சி தலைவரின் கணவர் இருவரும் சகிலாபானு என்ற பெண்ணை இடம் ஆக்கிரமிப்பு சம்பந்தமாக தாக்கியதாக கூறி அரசு மருத்துவமனையில் அனுமதி. காவல்துறை விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.



செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் 2025-26ஆம் நிதியாண்டிற்கான தாம்பரம் மாநகராட்சியின் நிதிநிலை அறிக்கை மேயர் வசந்தகுமாரி கமலகண்ணன் அவர்கள் தலைமையில் மாமன்றக் கூட்டரங்கில் தாக்கல் செய்யப்பட்டது. இக்கூட்டத்தில், தாம்பரம் மாநகராட்சி ஆணையர் சீ.பாலச்சந்தர், துணை மேயர் கோ.காமராஜ் மண்டலக் குழுத் தலைவர்கள், நிலைக்குழுத் தலைவர்கள், மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்..



தமிழக காவல்துறை தலைமை இயக்குனர் உத்தரவுப்படி பொது மக்கள் குறைதீர்க்கும் கூட்டம் புதன் கிழமை நெல்லை மாநகர காவல் ஆணையர் அலுவலகத்தில் நடைபெற்று வருகிறது. இதன்படி நடைபெற்ற இம்முகாமில் 14 பேர் கலந்து கொண்டு காவல் ஆணையர் சந்தோஷ் ஹாதிமணியிடம் பொதுமக்கள் புகார் மனுக்களை அளித்தார்கள். அம்மனுக்களை பெற்றுக்கொண்டு புகார் மனுக்கள் மீது சரியான நடவடிக்கை மேற்கொண்டு உரிய தீர்வு கிடைக்க வழிவகை செய்யப்படும் என காவல் ஆணையர் கூறினார். இக்கூட்டத்தில் காவல் துணை ஆணையர்கள் (மேற்கு) கீதா, (கிழக்கு) வினோத் சாந்தாராம் (தலைமையிடம்) .விஜயகுமார் ஆகியோர் கலந்துகொண்டார்கள்.



திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் நகர பாரதிய ஜனதா கட்சி சார்பாக மும்மொழிக் கொள்கையை ஆதரித்து நகரத்தலைவர் டி.குமார்தாஸ் தலைமையில் கையெழுத்து இயக்கம் நடைபெற்றது இதில் நகர பொதுச்செயலாளர்கள் எம்.சசிகுமார் ,கே. பாலசுப்பிரமணி முன்னிலை வகித்தனர். கையெழுத்து இயக்கத்தை , ஒட்டன்சத்திரம் கிழக்கு முன்னாள் ஒன்றிய தலைவர் எல்.டி.ருத்திரமூர்த்தி துவக்கி வைத்தார்.

# அலங்காநல்லூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் அறிவியல் ஆய்வுக்கூட கட்டிடம் கட்ட பூமி பூஜை

அலங்காநல்லூர். மார்ச்.7

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் புதிய அறிவியல் ஆய்வுக்கூடம் கட்டுவதற்கான பூமி பூஜை விழா நடைபெற்றுள்ளது



இந்த நிகழ்ச்சிக்கு சோழவந்தான் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேசன், கலந்து கொண்டு பூமி பூஜையை தொடங்கி வைத்தார். இதில் திமுக ஒன்றிய செயலாளர் தன்ராஜ், பரந்தாமன், நகரச் செயலாளர் ரகுபதி, பேரூராட்சி தலைவர் ரேணுகா ஈஸ்வரிகோவிந்தராஜ், ஒன்றிய துணைச் செயலாளர்கள் ராஜேந்திரன், அருண்குமார், விளையாட்டு மேம்பாட்டு அணி மாவட்டத் துணை அமைப்பாளர் பிரதாப், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் சந்தனகருப்பு, மாணவரணி அமைப்பாளர் யோகேஷ், சோழவந்தான் தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் தண்டலை தவசதீஸ், கோட்டைமேடு ராஜாஜி, பொறியாளர் அணி பாலகிருஷ்ணன், உட்பட ஆசிரியர்கள் ஒப்பந்ததாரர் கலந்து கொண்டனர்..

# தென்காசி மாவட்ட எஸ்டிபிஐ கட்சியின் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்

தென்காசி,. மார்ச்.8




தென்காசி மாவட்ட எஸ்டிபிஐ கட்சியின் சார்பில் கடையநல்லூர் மணிக்கூண்டு அருகில் வைத்து ஒன்றிய பாஜக அரசின் அரசியல் பழிவாங்கும் நடவடிக்கையாக, பொய்யான குற்றச்சாட்டின் கீழ், அமலாக்கத்துறையால் எஸ்டிபிஐ கட்சியின் அகில இந்திய தலைவர் எம்.கே.ஃபைஸி கைது செய்யப்பட்டுள்ளதை கண்டித்தும், அவரை விடுதலை செய்ய வலியுறுத்தியும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மாவட்ட தலைவர் திவான் ஒலி தலைமையில் நடைபெற்ற இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில், மாவட்ட பொதுச்செயலாளர் செய்யது மஹ்மூத் வரவேற்புரை நிகழ்த்தினார்.

மாவட்ட துணைத்தலைவர் முஹம்மது நைனார்,மாவட்ட அமைப்பு பொதுச்செயலாளர் ஷேக் முகம்மது ஒலி, மாவட்ட செயலாளர்கள் சீனா, சேனா, சர்தார், நூர்முஹம்மது, அப்துல் பாசித், மாவட்ட பொருளாளர் முத்துமுகம்மது, மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் யாசர்கான், அஸ்கர் அலி, கடையநல்லூர் தொகுதி துணைத்தலைவர் நைனா முஹம்மது கனி, துணைச்செயலாளர் சாஜித் அலி,எஸ்டிடியூ தொழிற்சங்க மாவட்ட தலைவர் அசன் கனி, மாவட்ட செயலாளர் அப்துல் கரீம், மகளிரணி மாவட்ட தலைவர் பரக்கத் நிஷா, மாவட்ட செயலாளர் சுலைகாள், வர்த்தகர் அணி மாவட்ட தலைவர் முஹம்மது கனி, மாவட்ட செயலாளர் தமீம் அன்சாரி, வழக்கறிஞர் அணி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சர்தார் அரபாத், வேளாண் அணி மாவட்ட பொறுப்பாளர் முஹம்மது காசிம், மருத்துவ சேவை அணி மாவட்ட தலைவர் செய்யதுஇப்ராஹிம், மாவட்ட செயலாளர் அப்துல் ரஹ்மான், தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட செயலாளர் ஷேக்முஹம்மது, கடையநல்லூர் நகர தலைவர் வழ. லுக்மான் ஹக்கீம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் சிறப்பு விருந்தினராக எஸ்டிபிஐ கட்சியின் மாநில பொதுக்குழு உறுப்பினர் ஜாபர் அலி உஸ்மானி, எஸ்டிபிஐ கட்சியின் மாவட்ட செயற்குழு உறுப்பினர் யாசர்கான், விமன் இந்தியா மூவ்மென்ட் மகளிரணி மாவட்ட தலைவி பரக்கத் நிஷா ஆகியோர் கலந்து கொண்டு , விசாரணை ஏஜென்சிகளை தவறாகப் பயன்படுத்தி, ஜனநாயக சக்திகளை மிரட்டி ஒடுக்கும் பாஜக அரசின் அடக்குமுறைக்கு எதிராக கண்டன உரை நிகத்தினர்.

இந்த கூட்டத்தில் பெண்கள் உட்பட 300க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு, எதிர் குரல்களை ஒடுக்கும் பாஜக அரசின் அரசியல் பழிவாங்கும் நடவடிக்கைக்கு எதிராகவும், எஸ்டிபிஐ கட்சியின் அகில இந்திய தலைவர் எம்.கே. ஃபைஸியை விடுதலை செய்ய வலியுறுத்தியும் முழக்கமிட்டனர்.





இராமநாதபுரம் மாவட்டம் ஆர் எஸ் மங்கலம் தாலுகா சோழந்தூர் அரசு உயர்நிலை பள்ளியில் தமிழ்நாடு முதல்வர் மு க. ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு நேற்று தி.மு.க.தகவல் தொழில் நுட்ப அணி சார்பில் மாணவர்களுக்கு நோட், புக்,எழுதுகோல் உள்ளிட்ட உபகரணங்கள் வழங்கப்பட்டது.இந்நிகழ்ச்சியில் தகவல் தொழில் நுட்ப அணி துணை அமைப்பாளர் ராதிகா,ஒன்றிய செயலாளர் மோகன் ,மாவட்ட விழிப்புணர்வு கண்காணிப்பு குழு உறுப்பினர் பிரபு உட்பட பலர் கலந்து கொண்டனர்.

Printed , published by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161